Helping your child with literacy and numeracy at home

Tamil



# எண்ணறிவு மற்றும் எழுத்தறிவுத் திறன்களில் உங்கள் பிள்ளைக்கு வீட்டில் உதவுதல்

NSW கல்வித் திணைக்களம்

பாடசாலை ஆரம்ப வகுப்புக்களில் படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்காக இச்சிறுநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

வீட்டில் இடம்பெறும் முக்கியமான கற்றலுக்கு ஆதரவுதவியாக இருப்பதற்கான செயற்பாடுகள் இதில் ஏராளம் உள்ளன. நீங்கள் உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து மகிழ்வுறவும், பாடசாலைக் கல்வியை உங்கள் பிள்ளை அபாரமான வகையில் துவங்கவும் ஏது செய்யும் வழியில் இச்செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இச்செயற்பாடுகளில் உங்கள் பிள்ளை ஈடுபட்டு அவற்றை ஆய்ந்து பார்க்க உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள், மற்றும் இச்செயற்பாடுகளுக்கு அவர்களுடைய சொந்த மறுமொழிகளை அவர்கள் அளிப்பதில் அவர்களுக்கு உதவியாக இருங்கள்.

# உள்ளடக்கம்


## எழுத்தறிவு 4

பேச்சுத்திறன் மற்றும் செவிமடுப்புத் திறன் 5

வாசிப்புத் திறன் 10

ஓவியம் மற்றும் எழுத்துத் திறன் 16

## எண்ணறிவு 21

எண்கள் மற்றும் எண்ணுதல் 22

கூட்டல் மற்றும் கழித்தல் 28

உரு-மாதிரி (patterns) களை அடையாளம் காணல் மற்றும் அவற்றை உருவாக்கல் 32

# எழுத்தறிவு

## எழுத்தறிவுத் திறன்களை வளர்த்துக்கொள்வதில் உங்கள் பிள்ளைக்கு உதவுதல்

**செவிமடுப்புத் திறன், பேச்சுத் திறன், வாசிப்புத் திறன், எழுத்துத் திறன் மற்றும் எழுத்துக்கூட்டல் திறன் ஆகியன எழுத்தறிவில் உள்ளடங்கும். எண்ணங்கள், உணர்ச்சிகள், மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தவும், பேச்சு மற்றும் எழுத்து மூலமான தகவல்களிலுள்ள அர்த்தத்தை விளங்கிக்கொள்வதற்குமான திறனை இது குறிக்கும்.**



# பேச்சுத்திறன் மற்றும் செவிமடுப்புத் திறன்

உங்கள் பிள்ளையின் பாடசாலைக் கல்விக்கான அடித்தளமாக பேச்சு மற்றும் செவிமடுப்புத் திறன்கள் அமைகின்றன. மற்றவர்களோடு பேச இயலவும், நட்புக்களை உருவாக்கிக்கொள்ளவும், பாடசாலையில் இடம்பெறும் அனைத்து செயற்பாடுகளிலும் சுறுசுறுப்பாகப் பங்கேற்கவும் இந்தத் திறன்கள் குழந்தைகளுக்கு உதவும்.

ஆங்கிலமல்லாத வேறொரு மொழியை நீங்கள் வீட்டில் பேசினால், உங்களுடைய பிள்ளை அவர்களது சொந்த மொழியைப் பயன்படுத்த நீங்கள் தொடர்ந்து உதவ வேண்டியது முக்கியம்.

# உங்கள் பிள்ளையுடன் பேசுதல்


- பல்வேறு விடயங்களைப் பற்றி, உதாரணமாக, அன்றாடம் நடக்கும் விடயங்களைப் பற்றி, **உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்**.
- கலாசாரக் கதைகள், உங்கள் சொந்தக் கதைகள் மற்றும் உங்கள் பிள்ளைகளின் **கதைகள் என்பவற்றைப் பகிர்ந்துகொள்ளுங்கள்**.
- நடந்துகொண்டிருக்கும் **விடயங்களைப் பற்றி விவரியுங்கள் அல்லது பேசுங்கள்**. உதாரணமாக, “இன்று நாம் பாடசாலைக்கு நடந்துசெல்லப் போகிறோம், மற்றும் பூங்காவைக் கடந்து செல்வோம்,” என்று நீங்கள் உங்கள் பிள்ளைக்குச் சொல்லலாம்.
- **உங்கள் பிள்ளை சொல்வதைச் செவிமடுத்துக் கேளுங்கள் மற்றும் உங்கள் பிள்ளையின் முறை வரும்போது அவரைப் பேச ஊக்குவியுங்கள்**. உரையாடல் ஒன்றைச் செவிமடுத்துக் கேட்டு அதில் எப்படி ஈடுபடுவது என்று கற்றுக்கொடுங்கள்.
- உரையாடல் ஒன்றை ஆரம்பிக்கும்போது அல்லது உங்கள் பிள்ளையுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, ‘ஆம்’, ‘இல்லை’ என்ற மறுமொழியைவிட அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கும் **கேள்விகளைக் கேளுங்கள்**.  உதாரணத்திற்கு, “இன்று பாடசாலையில் நீங்கள் என்ன செய்தீர்கள்?” என்று கேளுங்கள்.
- **‘எப்படி’ அல்லது ‘ஏன்’ என்று துவங்கும்** கேள்விகளைக் கேளுங்கள். உதாரணமாக, “எத்தனை பறவைகளைப் பூங்காவில் நீங்கள் பார்க்கிறீர்கள்?” என்று கேளுங்கள்.
- கேள்விகளைக் கேட்கும்போது, **மறுமொழி சொல்ல உங்கள் பிள்ளைக்கு நேரம் கொடுங்கள்**.
- **உரையாடல்களை மகிழ்ச்சி தரக் கூடியதாக அமைத்துக்கொள்ளுங்கள்**. வேடிக்கையான கதைகளை உருவாக்கிச் சொல்லுங்கள், மற்றும் உங்கள் பிள்ளையோடு சேர்ந்து பேசுங்கள், பாடுங்கள்.


# தகவல் ஒன்றைத் தெரியப்படுத்துதல்


- **கதை ஒன்றை திரும்பச் சொல்லுங்கள்**. கதையின் ஆரம்பத்திலும், நடுவிலும், முடிவிலும், என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பேசுங்கள்.
- வாசித்த பிறகு, **கதாபாத்திரங்களைப் பற்றிப் பேசுங்கள்** அல்லது அந்தப் புத்தகத்தில் உங்கள் பிள்ளைக்குப் பிடித்த பாகத்தைப் பற்றிப் பேசுங்கள்.
- ஒரு கொண்டாட்டத்திற்கு, அல்லது பாடசாலைக்குப் போவது போன்ற நிகழ்வுகளின்போது என்ன நடக்கக்கூடும் என்பதைப் பற்றிய **கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்**. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பேசுங்கள் மற்றும் உங்கள் பிள்ளையின் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு உங்கள் பிள்ளையைக் கேளுங்கள்.
- உங்களுடைய பிள்ளையின் கற்பனைத் திறனைப் பயன்படுத்தி **அவர்களுடைய சொந்தக் கதை ஒன்றை உருவாக்**க அவர்களுக்கு உதவுங்கள். "இந்தக் கதை எதைப் பற்றியது?" "கதையில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?" "கதையில் என்ன நடக்கிறது?" என்பன போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.
- **உங்கள் பிள்ளையின் முழுப் பெயர், முகவரி, வயது**, பிறந்த திகதி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை **அவருக்குக் கற்றுக்கொடுங்கள்**.
- அன்றைய நாள் எப்படி இருந்தது என்று உங்கள் பிள்ளையைக் கேளுங்கள், மற்றும் **மேலதிகமான விபரங்களைச் சொல்லுமாறு கேளுங்கள்**, உதாரணமாக, "நீங்கள் ஏன் அப்படி நினைத்தீர்கள்?" என்று கேட்கலாம்.





# ஆங்கில உரையாடல் மற்றும் வார்த்தை-உருவாக்கத் திறன்களை உங்கள் பிள்ளை வளர்த்துக்கொள்ள உதவுவதற்கான புத்தகங்கள்




# வார்த்தை உருவாக்கம்

- பேசும்போது **பண்புச்சொற்களைப் பயன்படுத்துங்கள்**. “அங்கே ஒரு நாய் இருக்கிறது,” என்று உங்கள் பிள்ளை சொன்னால், “ அது ஒரு சிறிய, முடி நிறைய உள்ள வெள்ளை நாய்,” என்று நீங்கள் விவரித்துச் சொல்லலாம்.
- **புதிய சொற்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதன்** மூலம் உங்கள் பிள்ளையின் மொழி வளர்ச்சி அதிகரிக்க உதவுங்கள்.
- உங்கள் பிள்ளையோடு சேர்ந்து வாசிக்கும்போது, புத்தகங்களில் பயன்படுத்தப்படும் **சொற்களைப் பற்றிப் பேசுங்கள்**. சொற்களின் அர்த்தத்தைப் பற்றி அவர்களோடு சேர்ந்து பேசுங்கள். பேசுவதற்காகப் ஆர்வம் ஊட்டக்கூடிய புதிய வார்த்தைகளையும் நீங்கள் தேடலாம்.
- புதிய வார்த்தைகளை வாக்கியத்தில் பயன்படுத்தும் **பயிற்சியை அளியுங்கள்**.
- வீட்டில் உள்ள பொருட்களின் பெயர் எழுதப்பட்ட **ஒட்டுத்தாள்களைத் தயாரியுங்கள்**.



# வாசிப்புத் திறன்

குழந்தைகளுக்கு மற்றவர்கள் வாசித்துக் காண்பிப்பதிலிருந்தும், குழந்தைகள் மற்றவர்களோடு சேர்ந்து வாசிப்பதிலிருந்தும், தாங்களாகவே வாசிப்பதிலிருந்தும் புதிய விடயங்களைக் குழந்தைகள் கற்பார்கள்.


ஒவ்வொரு நாளும் குழந்தைகளோடு சேர்ந்து வாசித்து மகிழ்வுறுங்கள். பாடசாலை, புத்தகக் கடை, நூலகம் மற்றும் சூப்பர் மார்க்கெட் ஆகிய இடங்களுக்கு நடந்துசெல்லுதல் போன்ற சமயங்களில் இதற்கான வாய்ப்புகள் கிடைக்குமா என்று பாருங்கள்.


கதைகள், அவற்றில் பயன்படுத்தப்படும் மொழி, வார்த்தைகள் மற்றும் வார்த்தைகளில் உள்ள எழுத்துக்களின் ஒலிகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள். உங்களுடைய சொந்த மொழியிலுள்ளப் புத்தகங்களை வாசியுங்கள்.


# ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து வாசியுங்கள்


- **வாசிப்பு மகிழ்ச்சியூட்டக்கூடியதாக இருக்குமாறு செய்யுங்கள்**. மற்றவர்களைக் கவனித்தல், மற்றவர்கள் செய்வதைப் போலத் தாமும் செய்தல், மேலும் மற்றவர்களோடு தொடர்பாடல் கொள்தல் ஆகியவற்றிலிருந்து குழந்தைகள் வாசிப்பைப் பற்றிக் கற்றுக்கொள்வார்கள்.
- தமக்குப் பிடித்த **புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மீண்டும் வாசிக்க உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்**.
- வாசிக்கத் துவங்கும் முன்பாக அந்தப் **புத்தகத்தைப் பற்றிப் பேசுங்கள்**. புத்தகத்தின் தலைப்பைப் பற்றியும் கதையில் மேற்கொண்டு என்ன நடக்கலாம் என்பதைப் பற்றியும் பேசுங்கள்.
- **புத்தகதிலுள்ள படங்களைப் பற்றி**யும், கதையோடு படங்கள் எப்படி ஒட்டிப் போகின்றன என்பதைப் பற்றியும் **பேசுங்கள்**.
- வாசிக்கும்போது, “அடுத்ததாக என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?”, “ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?” என்பதைப் போன்ற **கேள்விகளை உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள்**.
- வாசித்த பிறகு, **கதையைப் பற்றிப் பேசுங்கள்**. “கதையில் எந்தப் பகுதி உங்களுக்குப் பிடித்திருந்தது?” அல்லது “இந்தக் கதையில் பரபரப்பான, வேடிக்கையான அல்லது சோகமான பகுதி எது?” என்பதைப் போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.
- பிடித்த கதைகளை உங்கள் பிள்ளையுடனும் அவருடைய சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்களுடன் **மாறி மாறி வாசியுங்கள்**.
- செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், தெருக்களில் காணப்படும் பெயர்ப் பலகைகள், சமையல் செய்முறைகள் மற்றும் கடையில் வாங்கவேண்டிய பொருட்களின் அட்டவணை போன்ற **பலவிதமான விடயங்களை வாசிப்பதற்காகத் தேர்ந்தெடுங்கள்**.


## ஒத்திசைவு (rhyme) உள்ள ஆங்கிலப் புத்தகங்கள்















# வாசித்தல், மொழியையும் வார்த்தைகளையும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் குழந்தையுடன் மகிழ்வுறல்

- **ஒத்திசைவுகள் (rhymes)** அல்லது புதிர்கள் (riddles) **உள்ள ஆங்கிலப் புத்தகங்களைத் தேர்ந்தெடுங்கள்**.
- **ஒத்திசைவு உள்ள வார்த்தைகளைப் பற்றிப் பேசுங்கள்**. Cat, hat, sat, bat ஆகியன ஒத்திசைவுள்ள ஆங்கில வார்த்தைகளுக்கு உதாரணங்களாகும், ஏனெனில் இவை இரே ஒலியில் முடிவடையும் வார்த்தைகள்.
- **ஒத்திசைவுள்ள வார்த்தைகளை வைத்து விளையாடுங்கள்** மற்றும் ஒத்திசைவான விளையாட்டுக்களை விளையாடுங்கள். “Have you ever seen a snail deliver the mail?” போன்ற ஒத்திசைவான வார்த்தைகள் உள்ள வாக்கியங்களை உருவாக்குங்கள்.











# எழுத்துக்களின் ஒலிகளை வைத்து விளையாடுங்கள்


- **எழுத்துக்களின் ஒலிகளை வைத்து விளையாடுங்கள்**. ஒரே ஒலியில் துவங்கும் வார்த்தைகளைப் பயன்படுத்தி அர்த்தம் ஏதும் இல்லாத வாக்கியங்களை உருவாக்குங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு நீங்கள் வாசித்துக் காண்பிக்கும்போது, அவருக்குத் தெரிந்த **ஒலிகளை அடையாளம் காட்டி அவற்றைச் சொல்லுமாறு** கேளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் பெயரைப் பயன்படுத்தி **ஒலி விளையாட்டுக்களை விளையாடுங்கள்**. "உங்கள் பெயர் எந்த ஒலியில் துவங்குகிறது?", "Dad என்ற வார்த்தை துவங்கும் அதே ஒலியா?" என்பதைப் போன்ற கேள்விகளைக் கேட்கலாம்.

## ஆங்கில எழுத்துக்களைப் பற்றிய புத்தகங்கள்









# ஓவியம் மற்றும் எழுத்துத் திறன்

**ஆர்வமூட்டும் விடயங்களை வரையவும் அவற்றைப் பற்றி எழுதவும் உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்.**

**அவர்களுடைய ஓவியங்கள் மற்றும் எழுத்துக்களைப் பற்றிச் சொல்லுமாறு உங்கள் பிள்ளையைக் கேளுங்கள். அவர்களுடைய கதைகளிலும், அவற்றை வரைய அல்லது எழுத அவர்கள் தெரிவுசெய்த முறைகளிலும் ஆர்வம் காட்டுங்கள்.**



# ஒவ்வொரு நாளும் எழுதுங்கள்

- **படங்கள் வரைவது மற்றும் எழுதுவது மூலம் களிப்படையுங்கள்**. உங்கள் பிள்ளை செய்யவும், உருவாக்கவும் அல்லது விளையாடவும் விரும்பும் விடயங்களை வரைந்து காட்டுமாறு அல்லது எழுதிக் காட்டுமாறு கேளுங்கள்.
- **அவர்களுடைய எழுத்தைப் பற்றிப் பேசுமாறு உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்**. அவர்களுடைய கிறுக்கல்கள், ஒவியங்கள், எழுத்துக்கள் அல்லது வார்த்தைகள் ஆகியன இதில் உள்ளடங்கலாம்.
- வரையவும், எழுதவும் சுண்ணாம்புக் கோல், காகிதம் மற்றும் பென்சில்கள், 'மார்க்கர்'கள் மற்றும் பேனாக்கள் போன்ற **வெவ்வேறு பொருட்களைப் பயன்படுத்துங்கள்**.
- **உங்கள் பிள்ளையுடைய பெயரை எழுதுமாறு** அவரைக் கேளுங்கள். உங்கள் பிள்ளைக்கு முக்கியமானவர்களுடைய பெயர்களை எழுதவும் உங்கள் பிள்ளை முயற்சிக்கலாம்.
- உங்கள் பிள்ளை எழுதிக்கொண்டிருக்கும்போது அல்லது வரைந்துகொண்டிருக்கும்போது அவர்கள் எதை எழுத அல்லது வரைய முயற்சித்துக்கொண்டிருக்கிறார்களோ அந்தப் படத்தைப் **பற்றியும் அவர்கள் எழுதும் எழுத்துக்களின் ஒலிகளைப் பற்றியும் பேசுங்கள்**.
- **அவர்களுடைய கற்பனைத் திறனைப் பயன்படுத்திக்** கதைகளை உருவாக்க **உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்**. கதைக்குரிய படங்களை வரைந்தும் வார்த்தைகளை எழுதியும் அவர்கள் கதைப் புத்தகமொன்றை உருவாக்கலாம்.
- உங்கள் பிள்ளையின் **சொந்த மொழியில் தகவல்களை எழுத** அவர்களுக்கு உதவுங்கள்.



# ஒரு நோக்கத்திற்காக வரைதல் அல்லது எழுதுதல்

- கடையில் வாங்க வேண்டிய பொருட்களின் அட்டவணை, அல்லது குடும்பத்தில் உங்கள் பிள்ளைக்குப் பிடித்தமான நபர் அல்லது புத்தகத்தை **வரைய அல்லது அவற்றைப் பற்றி எழுத ஊக்குவியுங்கள்**.
- **ஒரு பாடல் அல்லது கவிதை ஒன்றை உருவாக்குங்கள்**, மற்றும் அந்தப் பாடல் அல்லது கவிதையோடு ஒத்துப்போகும் வார்த்தைகளை எழுதுங்கள் அல்லது படம் ஒன்றை வரையுங்கள்.
- உங்கள் பிள்ளை வரைந்துகொண்டிருக்கும்போது அல்லது எழுதிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் உருவாக்கிகொண்டிருப்பதைப் பற்றி **விளக்கிச் சொல்லுமாறு அவர்களிடம் கேளுங்கள்.**
- சமீபத்தில் நடந்த ஆர்வமூட்டிய, வேடிக்கையான அல்லது பரபரப்பான நிகழ்வு ஒன்றைப் பற்றி உங்கள் பிள்ளையின் நண்பருக்கு அல்லது வீட்டிலுள்ள யாருக்காவது **கடிதம் ஒன்றை எழுத ஊக்குவியுங்கள்**.
- உங்கள் பிள்ளை தினமும் எழுதுவதற்கு அல்லது படங்கள் வரைவதற்காக ஒரு நோட்டுப் புத்தகம் அல்லது **தினக் குறிப்பேடு ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள்**.
- ஒரு கொண்டாட்டம் அல்லது சிறப்பு நிகழ்ச்சி **ஒன்றிற்கான அட்டை** அல்லது அழைப்பு மடல் **ஒன்றை உருவாக்குங்கள்**.



# செய்திகளைப் பற்றிப் பேசுங்கள்

- உங்கள் பிள்ளை அனுப்ப விரும்பும் **செய்தி ஒன்றை உருவாக்கச் சொல்லுங்கள்**. இது “நாய்கள் -ஜாக்கிரதை” என்ற சுவரொட்டியாக இருக்கலாம், அல்லது அவர்கள் செய்ய விரும்பும் விடயங்களைப் பற்றி அவர்களுடைய ஆசிரியருக்கு எழுதும் கடிதமாக இருக்கலாம்.
- உங்கள் பிள்ளையின் கலாச்சாரம், அனுபவங்கள் அல்லது ஆர்வங்களைப் பற்றிய **அன்றாடச் சொற்களைப் பயன்படுத்துங்கள்**.
- உங்கள் பிள்ளை எழுதியுள்ள **கடிதங்கள்**, அல்லது நீங்களும் உங்கள் பிள்ளையும் சேர்ந்து வாசித்துள்ள **கதைகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள்**.
- பேசும்போது, **பல விதமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களில் பேச உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள்**.






3
5
6

# எண்ணறிவு

## உங்கள் பிள்ளையின் எண்ணறிவுத் திறன்களை வளர்க்க உதவுதல்

அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளில் எண்களின் பங்கு என்ன என்பதை விளங்கிக்கொள்ள இயலும் திறன் எண்ணறிவில் அடங்கும்.

அனுதினமும் நாம் எண்களைக் காண்கிறோம் மற்றும் பயன்படுத்துகிறோம். நாம் வாசிக்கும் பக்கங்களில் எண்களைக் காண்கிறோம், நமது வீட்டிற்கு எண் ஒன்று இருக்கிறது, மற்றும் நாம் ஏதாவது பொருட்களை வாங்கும்போது எண்களைக் கூட்டுகிறோம் அல்லது கழிக்கிறோம்.

எண்ணறிவைப் பற்றி நேர்முகமானதொரு மனப்பாங்கினை உங்கள் பிள்ளை வளர்த்துக்கொள்ள உதவுங்கள்.

எண்ணறிவுத் திறன்களை உங்களுடைய சொந்த மொழியைப் பயன்படுத்தி வளர்க்கவேண்டியது முக்கியம்.



# எண்கள் மற்றும் எண்ணுதல்

‘எண்ணுதல்’ என்பது ஆரம்ப நிலையிலேயே குழந்தைகள் வளர்த்துக்கொள்ளும் திறன் ஆகும். எண்ணுதலில் பின்வருவன உள்ளடங்கும்:

- சரியான வரிசைப்படி எண்களைச் சொல்லுதல் மற்றும் நினைவுகூர்தல்
- எண்களுக்கான சொற்களை பொருட்களோடு இணைத்தல்
- கடைசியாக எண்ணப்பட்ட எண் மொத்தப் பொருட்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளல்.

## பயன்படுத்துவதற்கான வார்த்தைகள்

- முன்னோக்கி எண்ணவும், பின்னோக்கி எண்ணவும்
- முந்தைய எண், அடுத்த எண்
- இதை விட அதிகமாக, இதை விடக் குறைவாக
- அதைப் போன்றதே.

# ஆங்கில எண்கள்

| | | | |
|---|---|---|---|
| 0 | zero | 1 | one |
| 2 | two | 3 | three |
| 4 | four | 5 | five |
| 6 | six | 7 | seven |
| 8 | eight | 9 | nine |
| 10 | ten | | |




# எண்களைப் பற்றிக் கற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்


- எண்களையும் அளவுகளையும் உங்கள் பிள்ளை விளங்கிக்கொள்ள உதவுவதற்காக **எண்களும் புள்ளிகளும் உள்ள பகடைக் காய்க(dice)ளைப் பயன்படுத்துங்கள்**. “இந்தப் பகடைக் காயில் எத்தனைப் புள்ளிகள் இருக்கின்றன?” என்று உங்கள் பிள்ளையைக் கேளுங்கள்.
- பகடைக் காய்களும் எண்ணிக்கையும் தேவைப்படும் **‘அட்டை விளையாட்டுக்க’(board games)ளை பிள்ளையுடன் சேர்ந்து விளையாடுங்கள்**.
- **கதைகளை வாசித்துப் பகிர்ந்துகொள்ளுங்கள்**. எண்ணுதல், எண்ணிக்கை அளவுகள், பக்கங்களின் எண்கள் ஆகியன உள்ளடங்க, ஒரு புத்தகத்தில் நீங்கள் பார்க்கும் எண்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள்.
- **உலாவச் செல்லும்போது எண்களைக் கண்டுபிடித்துச் சொல்லுமாறு உங்கள் பிள்ளையைக் கேளுங்கள்**. “உங்கள் கண்களில் படும் எண்கள் என்ன?” என்று உங்கள் பிள்ளையைக் கேளுங்கள். வீட்டு எண்கள், இலக்கத் தகடுகள் மற்றும் தெருக் குறியீடுகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள்.
- கடிகாரங்கள் மற்றும் தொலைபேசிகள் போன்ற அன்றாடப் பொருட்களின் மீதுள்ள **எண்களைப் பற்றிப் பேசுங்கள்**. உதவிகரமான இலக்கங்களை உங்கள் பிள்ளை நினைவுகூர உதவுங்கள்.

# பொருட்கள் அல்லது புள்ளிகளின் எண்ணிக்கையைப் புரிந்துகொள்ளுதல்


## பகடைக் காய்களில் புள்ளிகள் அமைந்துள்ள முறைகள்



## புள்ளிகள் அமைந்துள்ள முறைகள்




## ‘டொமினோ’-வில் புள்ளிகள் அமைந்துள்ள முறைகள்



# உங்கள் பிள்ளையோடு சேர்ந்து எண்ணுதல்


- **வீட்டில் ஏதாவது வேலைகள் செய்துகொண்டிருக்கும்போது பொருட்களை எண்ணுங்கள்**. உங்கள் பிள்ளையோடு சேர்ந்து சாதாரணமான செய்முறைகளைப் பயன்படுத்தி சமையுங்கள், அப்போது சமைப்பதற்குப் பயன்படுத்தும் பொருட்களை எண்ணி வைக்குமாறு உங்கள் பிள்ளைக்குச் சொல்லுங்கள்.
- குடும்பத்தினர் ஒன்றாகச் சாப்பிடுவதற்காக **மேசையை ஆயத்தப்படுத்துவதில் உதவுமாறு உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்**. ஆட்கள், மற்றும் சாப்பாட்டு மேசையில் தேவைப்படும் தட்டுகள், கோப்பைகள், முள்கரண்டிகள் மற்றும் ஸ்பூன்கள் ஆகியவற்றை எண்ணுமாறு உங்கள் பிள்ளையைக் கேளுங்கள்.
- பாடசாலைச் சீருடையை உங்கள் பிள்ளை அணியும்போது அவர்களுடைய சட்டையில் உள்ள பொத்தான்களை **உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து எண்ணுங்கள்**.
- உங்கள் பிள்ளையின் மதிய உணவுப் பெட்டியில் **எத்தனை வகைகள் உள்ளன என்று எண்ணுமாறு** உங்கள் பிள்ளையைக் கேளுங்கள்.
- **முன்னோக்கி எண்ணுங்கள்**. கார்கள், வீடுகள், காலணிகள் மற்றும் பைகள் போன்ற அன்றாடப் பொருட்களை எண்ணுங்கள்.
- **பின்னோக்கி எண்ணுங்கள்**. படிக்கட்டுகளில் கீழே இறங்கி, பிறகு மேலே ஏறுங்கள். 10, 9, 8 ....

## ஆங்கிலத்திலுள்ள எண்ணிக்கைப் பாடல்கள்




- Here is the Beehive
- Five Little Ducks
- The Ants Go Marching
- One, Two, Buckle My Shoe
- Five Cheeky Monkeys Jumping on the Bed
- Ten Green Bottles

## எண்கள் மற்றும் எண்ணிக்கையைப் பற்றி ஆங்கிலத்திலுள்ள புத்தகங்கள்

















# கூட்டல் மற்றும் கழித்தல்


கூட்டல் மற்றும் கழித்தல் ஆகியவற்றைப் பற்றிய அறிவை இளம் குழந்தைகள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களை ஒன்று சேர்ப்பது, மற்றும் அவற்றை நீக்குவது மற்றும் பிரிப்பது ஆகியன இதில் உள்ளடங்கும்.

## பயன்படுத்துவதற்கான வார்த்தைகள்

- ஒன்று சேர்க்கும், இணைக்கும், உருவாக்கும்
- அதை விடக் குறைந்த, அதை விட அதிகமான
- ஒட்டு மொத்தமாக
- கழியுங்கள்
- இன்னும் எத்தனை

# கூட்டலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்

- பொம்மைகள், பழங்கள், புத்தகங்கள் போன்ற **அன்றாடப் பொருட்களை எண்ணி அவற்றின் எண்ணிக்கையை ஒன்று கூட்டுங்கள்**. எண்ணிக்கையைக் கூட்டுவதற்குக் குழந்தைகள் அவர்களுடைய விரல்களைப் பயன்படுத்தலாம்.
- நீங்கள் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது, நீங்கள் பார்க்கும் **வெவ்வேறு வகைப் பொருட்களை எண்ணி, அவற்றை ஒன்று கூட்டுங்கள்,** உதாரணமாக, ஒரு தோட்டத்திலுள்ள மலர்கள்.
- ஒரு நாட்காட்டியில், உங்கள் பிள்ளை பாடசாலைக்குச் சென்ற நாட்களை அல்லது வேறொரு நடவடிக்கையை மேற்கொண்ட நாட்களைக் குறிக்கச் சொல்லுங்கள். வார இறுதியில், **ஒவ்வொரு நடவடிக்கைக்குமான நாட்களை ஒன்று கூட்டச் சொல்லுங்கள்**.
- கடையில் பொருட்கள் வாங்கும்போது, நீங்கள் என்னவெல்லாம் வாங்கவேண்டும் என்பதைப் பற்றிப் பேசுங்கள். “வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் எத்தனை வாழைப்பழங்கள்? இன்னொரு பழத்தை நான் அதிகமாக எடுத்தால், நம்மிடம் எத்தனை பழங்கள் இருக்கும்?” என்பதைப் **போன்ற கேள்விகளைக் கேளுங்கள்**.
- **இரண்டு பகடைக் காய்களைப் பயன்படுத்திக் கூட்டுவதை ஊக்குவிக்கும் விளையாட்டுக்களை விளையாடுங்கள்**, உதாரணமாக "Snakes and Ladders."








# கழித்தலை ஊக்குவிக்கும் செயற்பாடுகள்


- **அன்றாடப் பொருட்களைப் பயன்படுத்தி கழித்தலைச் செய்யுங்கள்**. அவர்களுடைய மதிய உணவுப் பெட்டியில் உள்ள வகைகளை எண்ணி, பிறகு ஒவ்வொரு வகையும் எடுக்கப்படும்போது அதைக் கழியுங்கள்.
- **சாப்பிடும்போது, எத்தனை வகைகள்** உங்களிடம் உள்ளன **என்று எண்ணுங்கள்**. "எத்தனை திராட்சைகளை நீங்கள் சாப்பிட்டீர்கள்? இன்னும் எத்தனை மீதம் உள்ளன?" என்பதைப் போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.
- அட்டைப் பெட்டிகளில் இருந்து முட்டைகளை வெளியே எடுப்பது, அல்லது ஒரு சீப்பில் இருந்து வாழைப்பழங்களை அகற்றுவது போன்ற **பொருட்களை நீக்கும் செயல்களைச் செய்யும்போது ஏற்படும் வித்தியாசத்தினைக் கவனிக்க** உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள்.
- ஒரு குழுவிலிருந்து ஒன்று எடுக்கப்படும்போது எண்ணிக்கை குறையும் விதத்திலான "Five Little Ducks" போன்ற **பாடல்களைப் பாடுங்கள்**.
- "கிண்ணத்தில் ஐந்து ஆப்பிள்கள் உள்ளன. இரண்டு ஆப்பிள்களை நான் சாப்பிட்டுவிட்டால் மீதம் எத்தனை ஆப்பிள்கள் இருக்கும்?" என்பதைப் போன்ற **கேள்விகளைக் கேளுங்கள்**.

## கூட்டல் மற்றும் கழித்தலைப் பற்றி ஆங்கிலத்திலுள்ள புத்தகங்கள்






# உரு-மாதிரி (patterns) களை அடையாளம் காணல் மற்றும் அவற்றை உருவாக்கல்

ஒரே வகையான ‘வடிவம்’ திரும்பத் திரும்ப வருவதை ‘உரு-மாதிரி’ (pattern) என்போம். வடிவங்கள், ஒலிகள், எண்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு இதனை அமைக்கலாம்.

அன்றாட செயற்பாடுகள் மூலமாக ‘உரு-மாதிரி’களை அடையாளம் காணவும், உருவாக்கவும், பார்த்து அதே போலச் செய்யவும் குழந்தைகள் கற்றுக்கொள்ளலாம்.





## பயன்படுத்துவதற்கான வார்த்தைகள்

- திரும்பச் செய்
- தொடர்க
- உருவாக்கு
- அடையாளம் காண்பி
- விவரி
- வடிவமைப்பு
- அதே போன்ற
- வேறுபட்ட

## ‘உரு-மாதிரிக’ளை அடையாளம் காண்க


- பொட்டலம் கட்டும் தாள், குளியலறைத் தரை ஓடுகள் மற்றும் வீட்டின் முன்பக்கம் உள்ள வாகன-நுழைவழி போன்றவற்றிலுள்ள **‘உரு-மாதிரிக’ளை அடையாளப்படுத்துங்கள்**. வெவ்வேறு ‘உரு-மாதிரிக’ளைப் பற்றியும் அவற்றைத்‘உரு-மாதிரிக’ளாக ஆக்குவது எது என்பதைப் பற்றியும் பேசுங்கள்.
- **வடிவமைப்புகளைப் பற்றிப் பேசுங்கள்.** “இது ஏன் ஒரு வடிவமைப்பாக இருக்கிறது?”, “இந்த வடிவமைப்பைத் தொடர இயலுமா?” போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.
- ‘உரு-மாதிரிக’ளை உங்கள் பிள்ளை அடையாளம் காண உதவுவதற்கு **சீட்டுகள் (cards), ‘டொமினோ’க்கள் அல்லது பகடைக் காய் விளையாட்டுக்களை விளையாடுங்கள்**.

## ‘உரு-மாதிரிக’ளைப் பார்த்து அப்படியே செய்தல்


- **ஒரே மாதிரியான வகையில் கைகளைத் தட்டி** விளையாடும் ஆட்டத்தினை உங்கள் பிள்ளையுடன் விளையாடுங்கள். நீங்கள் திரும்பவும் அதே போல் செய்வதைப் போலக் கைகளைத் தட்டுமாறு உங்கள் பிள்ளைக்குச் சொல்லுங்கள்.
- ஒரு தட்டு, ஒரு ஸ்பூன், மீண்டும் ஒரு தட்டு, ஒரு ஸ்பூன், மீண்டும் ஒரு தட்டு, ஒரு ஸ்பூன் என்று தொடரும் **‘உரு-மாதிரி’யைப் பயன்படுத்தி சாப்பாட்டு மேசையை ஆயத்தப்படுத்துங்கள்**.


## ‘உரு-மாதிரிக’ளை அமைத்தல்


- பொம்மைகள் மற்றும் பழங்கள் போன்ற அன்றாடப் பொருட்களைப் பயன்படுத்தி **‘உரு-மாதிரிக’ளை அமையுங்கள்**.
- முதலில் **சுலபமான ‘உரு-மாதிரிக’ளில் துவங்கி, பிறகு கடினமான ‘உரு-மாதிரிக’ளை உருவாக்குங்கள்**; உதாரணமாக - ஒரு ஆப்பிள், இரண்டு வாழைப்பழம், ஒரு ஆப்பிள், இரண்டு வாழைப்பழம், ஒரு ஆப்பிள், இரண்டு வாழைப்பழம் என்பதைப் போல செய்யலாம்.




## ‘உரு-மாதிரிக’ளைப் பற்றி ஆங்கிலத்திலுள்ள புத்தகங்கள்






# உங்கள் பிள்ளை ஆங்கில எழுத்தறிவுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவுவதற்கான புத்தகங்கள்

## உரையாடல்கள் மற்றும் வார்த்தை உருவாக்கம் ஆகியவற்றிற்கான புத்தகங்கள்

**Dunbi the Owl** – Daisy Utemorrah, editor Pamela Lofts. Scholastic Australia

**Possum Magic** – Mem Fox, illustrator Julie Vivas. Omnibus Books

**Splosh for the Billabong** – Ros Moriarty, illustrator Balarinji. Allen and Unwin

**The Day the Crayons Quit** – Drew Daywalt, illustrator Oliver Jeffers. Harper Collins Children's Books

**The Echidna and the Shade Tree** – Mona Green, editor Pamela Lofts. Scholastic Australia

**The Little Refugee** – Anh and Suzanne Do, illustrator Bruce Whatley. Allen & Unwin Children

**The True Story of the 3 Little Pigs** – Jon Scieszka, illustrator Lane Smith. Penguin

**The Very Cranky Bear** – Nick Bland. Scholastic Australia

## ஒத்திசைவு (rhyme) உள்ள புத்தகங்கள்

**Miss Spider's Tea Party** – David Kirk. Scholastic Inc

**No Way Yirrikipayi!** – Alison Lester. Pan Macmillan Australia

**Pig the Pug** – Aaron Blabey. Scholastic Australia

**Piranhas Don't Eat Bananas** – Aaron Blabey. Scholastic Australia

**Oi Cat!** – Kes Gray, Jim Field. Hachette Australia

**Sebastian Lives in a Hat** – Thelma Catterwell, illustrator Kerry Argent. Omnibus Books

**Walking Through the Jungle** – Stella Blackstone. Barefoot Books

**The Cat in the Hat** – Dr Seuss. Random House

## எழுத்துக்களைப் பற்றிய புத்தகங்கள்

**ABC Dreaming** – Warren Brim. Magabala Books

**Animalia** – Graeme Base. Picture Puffins

**Dr Seuss's ABC** – Dr Seuss. Random House

**I Spy, An Alphabet in Art** – Lucy Micklethwait. Greenwillow Book

இங்கு அட்டவணையிடப்பட்டுள்ள புத்தகங்களை, எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கல்வியில் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

**எமது வலைத்தளத்திற்குச் சென்று பாடசாலைக் கல்வியை அபாரமான முறையில் துவங்க உங்களுடைய பிள்ளைக்கு உதவக்கூடிய மூலவளங்களைப் பெறுங்கள்.**

education.nsw.gov.au/lit-and-num-at-home




# உங்கள் பிள்ளை ஆங்கில எண்ணறிவுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவுவதற்கான புத்தகங்கள்

## எண்கள் மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றைப் பற்றிய புத்தகங்கள்

**Counting on Community** – Innosanto Nagara. Seven Stories Press, Penguin.

**Counting with Tiny Cat** – Viviane Schwarz. Walker Books

**Five Little Ducks** – Penny Ives. Child's Play International Ltd

**One is a Snail, Ten is a Crab** – April Pulley Sayre and Jeff Sayre, illustrator Randy Cecil. Scholastic Australia

**One Woolly Wombat** – Kerry Argent. Scholastic Australia

**Ten Black Dots** – Donald Crews. Scholastic Australia

**Ten Little Dinosaurs** – Mike Brownlow, illustrator Simon Rickerty. Orchard Books

**Ten Little Jarjum** – Tabulam Aboriginal Community members, editors Suzi Williams and Kate Merrifield. NSW Board of Studies

**Ten Scared Fish** – Ros Moriarty, illustrator Balarinji. Allen and Unwin

## கூட்டல் மற்றும் கழித்தல் ஆகியவற்றைப் பற்றிய புத்தகங்கள்

**Five Little Monkeys Play Hide-and-seek** – Eileen Christelow. Houghton Mifflin

**Ten Little Beasties** – Rebecca and Ed Emberley. Macmillan

**Ten Little Fingers and Ten Little Toes** – Mem Fox, illustrator Helen Oxenbury. Puffin Books

**Ten Little Ladybugs** – Melanie Gerth, illustrator Laura Huliska-Beith. Intervisual Books Inc

**There Were 10 in the Bed** – illustrator Wendy Straw. Sweet Cherry Publishing

**The Shopping Basket** – John Burningham. Random House

**Uno's Garden** – Graeme Base. Penguin Books, Puffin

## உரு-மாதிரிகள் அமைப்பதைப் பற்றிய புத்தகங்கள்

**Anno's Counting Book** – Mitsumasa Anno. Harper Collins

**Caterpillar and Butterfly** – Ambelin Kwaymullina. Fremantle Press

**One fish, two fish, red fish, blue fish** – Dr Seuss. Random House

**The Very Hungry Caterpillar** – Eric Carle. Hamish Hamilton Press

© State of New South Wales (Department of Education), 2020.

The copyright material published in this resource is subject to the Copyright Act 1968 (Cth) and is owned by the NSW Department of Education or, where indicated, by a party other than the NSW Department of Education (third-party material).

Copyright material available in this resource and owned by the NSW Department of Education is licensed under a Creative Commons Attribution 4.0 International (CC BY 4.0) licence. This licence allows you to share and adapt the material for any purpose, even commercially.

Attribution should be given to © State of New South Wales (Department of Education), 2020.

Material in this resource not available under a Creative Commons licence:

- the NSW Department of Education logo, other logos and trademark-protected material
- material owned by a third party that has been reproduced with permission.
  You will need to obtain permission from the third party to reuse its material.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், உங்கள் பாடசாலையின் அதிபரை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யினை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். இச் சேவை உங்களுக்குக் கட்டணம் இல்லாமல் கிடைக்கும்.